**செய்தி வெளியீடு எண் : 2561** **நாள் : 19.12.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அரசு, இவ்வலைத்தளத்தின் (IFHRMS) எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டும், சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் மேம்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்ப மாற்றத்தினை 22.12.2023 முதல் 01.01.2024 வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய காலத்தில் IFHRMS வலைத்தளம் கீழ்காணும் அட்டவணைப்படி செயல்படும்.

| **வகைகள்** | **சேவை பட்டியல்** | 22.12.2023 | 23.12.2023 to 25.12.2023 | 26.12.2023 to 01.01.2024 | 02.01.2024 முதல் |
|---|---|---|---|---|---|
| **மின் செலுத்துச்சீட்டு (e–Challan) சேவைகள்** | பொதுமக்கள் | ✓ | X | ✓ | ✓ |
| | IFHRMS உடன் ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகள் (ELCOT RoW, P&E, வணிக வரிகள், போக்குவரத்து, பதிவுத் துறை) | ✓ | X | ✓ | ✓ |
| | பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு (DDO)/ அரசு ஊழியர்களுக்கு/ ஓய்வூதியர்களுக்கான சேவைகள் | X | X | X | ✓ |
| **வைப்பு கணக்கு செயல்பாடுகள்** | வைப்பு கணக்கு செயல்பாடுகள் | X | X | X | ✓ |
| **பட்டியல் மற்றும் இதர வலைத்தள பயன்பாடுகள்** | சம்பளம், ஓய்வூதிய பட்டியல்கள் செயலாக்குதல் | X | X | X | ✓ |
| | சம்பளம் சாரா இதர பட்டியல்கள் செயலாக்குதல் | X | X | X | ✓ |

**<u>டிசம்பர் 2023 மாத ஊதியம், ஓய்வூதியம் மற்றும் இதர பட்டியல்கள் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கால அட்டவணை:</u>**

i. பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் சம்பள பட்டியல்கள் சமர்ப்பித்தல் - 11.12.2023 முதல் 20.12.2023 வரை

ii. சம்பளம் சாரா இதர பட்டியல் - 20.12.2023 வரை

வகைகள் சமர்ப்பித்தல்

iii. கருவூல அலுவகங்களில் பட்டியல்கள் ஏற்பளித்தல் - 21.12.2023

**மேலும், டிசம்பர் 2023 மாதத்திற்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகியவை டிசம்பர் 2023–ன் கடைசி வேலை நாளான 29.12.2023 அன்று வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

எனவே, IFHRMS பயனர்கள் மேற்கண்ட அட்டவணைக்கேற்ப திட்டமிட்டு பணிகளை விரைந்து முடிக்கவும், அரசின் இந்த தொழில்நுட்ப புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கருவூலக் கணக்கு ஆணையர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in